வணக்கம்

ஆகாஷ்வாணி – புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி : 05.09.2026 – சனிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

------------------------------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

ஆசிரியர் தினம், இன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. ஆசிரியர்கள் தங்களது படிப்பறிவை வளர்த்துக் கொள்வதுடன், தொழில்நுட்பத்தை பயன்படுத்தி புதுமையான தத்துவ முறைகளை பின்பற்ற வேண்டும் என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னை வந்துள்ள குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று பிரபல நாளிதழ் ஒன்றின் 75ஆவது ஆண்டு நினைவு தபால் தலையை வெளியிட்டார்.

போதைப்பொருள் பழக்கத்திலிருந்து இளம் மாணவர்களை விடுவிப்பதில் ஆசிரியர்கள் கவனத்துடன் செயல்பட வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

உக்ரைன் மற்றும் ரஷ்யா ஆகிய இருநாடுகளின் மோதலை முடிவுக்கு கொண்டுவர இந்தியா தொடர்ச்சியான தொடர்பில் இருப்பதாக மத்திய வெளியுறவு அமைச்சர் டாக்டர். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் தினம் – முர்மு 1 (18)

ஆசிரியர் தினம், இன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. மிகச்சிறந்த கல்வியாளரும், தத்துவ பேராசிரியரும், முன்னாள் குடியரசு தலைவருமான சர்வபள்ளி ராதாகிருஷ்ணனின் பிறந்த நாளான இன்று

ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகிறது. இத்தினத்தையொட்டி குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், ஆசிரியர்கள் தங்களது படிப்பறிவை வளர்த்துக் கொள்வதுடன், தொழில்நுட்பத்தை பயன்படுத்தி புதுமையான தத்துவ முறைகளை பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். ஆசிரியர்களும், கல்வியாளர்களும், திறமையை வளர்த்துக் கொள்வதில் முக்கிய பங்காற்றுவதாக அவர் தெரிவித்துள்ளார். மாணவர்களின் தனித்துவமான திறமையைக் கண்டறிந்து அவர்களின் ஆசையைப் பூர்த்தி செய்யும் ஆசிரியர்களை நாம் ஊக்குவிக்கலாம் என்று அவர் தெரிவித்துள்ளார். மாணவர்களிடையே சுதந்திரமான சிந்தனையை ஊக்குவிப்பதுடன் பெருமை சேர்க்கும் பழக்கத்தை உருவாக்க வேண்டும் என்று அவர் ஆசிரியர்களைக் கேட்டுக் கொண்டார். நாட்டை மிகப்பெரிய உச்சத்திற்கு கொண்டு செல்ல திறன் வாய்ந்த இளம் தலைமுறையினருக்கு ஒளியேற்றும் பணியை ஆசிரியர்கள் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் ஒரு அசாதாரணமான ஆசிரியராக திகழ்ந்தார் என குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியர் தினம் – முர்மு 2 (07)

ஆசிரியர் தினத்தை ஒட்டி அவர் இன்று புதுடெல்லியில் 27 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 48 பள்ளி ஆசிரியர்களுக்கு தேசிய நல்லாசிரியர் விருது வழங்கி சிறப்பித்தார். உயர்கல்வி நிறுவனங்களில் 21 ஆசிரியர்களுக்கும் அவர் தேசிய விருதுகளை வழங்கி சிறப்பித்தார். மேலும், திறன் மேம்பாட்டு நிறுவனத்தின் 11 பயிற்சியாளர்கள் என 82 பேர் இந்த விருதினை பெற்றனர். ஆசிரியர் தினம் குறித்த ஒரு செய்தி தொகுப்பு ...

(வாய்ஸ்)

ஆசிரியர் தினம் – முர்மு 3 வாய்ஸ் (17)

(வாய்ஸ்)

மாதா, பிதா, குருவுக்கு அடுத்தபடியாக நாம் ஆசிரியரை கொண்டாடி வருகிறோம். ஆசிரியர் பணியை புனித பணியாக கருதி உழைக்கும் ஆசிரியர்களை சிறப்பிக்கும் வகையில் இத்தினம் கொண்டாடப்படுகிறது. அதற்கு முன்னுதாரணமாக திகழ்ந்தவர் தான் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன்.

அவர் 1888ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5ஆம் தேதி திருத்தணி அருகேயுள்ள சர்வபள்ளி கிராமத்தில் பிறந்தார். சென்னை பிரசிடென்சி கல்லூரியில் விரிவுரையாளராக ஆசிரியர் பணியை தொடர்ந்தார். பின்னர், தத்துவ விஞ்ஞானியாகவும், அறிஞர், குடியரசு தலைவர் என புகழ்பெற்றார். ஆசிரியர்கள் நமக்கு ஒழுக்கம், தன்னம்பிக்கை, பொது அறிவு என பல்வேறு விஷயங்களை கற்பித்து உண்மையான ஆசிரியர்களாக திகழ்கின்றனர். அப்படிப்பட்ட ஆசிரியர்களை நாம் கொண்டாட வேண்டியது அவசியம். ஆசிரியர்களுக்கு நன்றி சொல்லும் விதமாக செப்டம்பர் மாதம் 5ஆம் தேதியை ஆசிரியர் தினமாக நாம் கொண்டாடி வருகிறோம். இந்நாளில் மாணவர்கள் தங்களுக்கு உலகை கற்றுத் தரும் ஆசிரியர்களுக்கு நன்றிகளையும் பரிசுகளையும் வழங்குவது வழக்கம். இந்நாளில் மத்திய மாநில அரசுகள் ஆசிரியர்களுக்கு விருதுகளை வழங்கி சிறப்பித்து வருகின்றன.

## ஆசிரியர் தினம் – 1 (21)

ஆசிரியர் தினத்தை ஒட்டி குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில் இந்தியாவின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் நாடுமுழுவதுமுள்ள ஆசிரியர்கள் தன்னலமற்ற சேவையை ஆற்றி வருவதாக குறிப்பிட்டுள்ளார். தத்துவஞானியாகவும் கல்வியாளராகவும் திகழ்ந்த பாரத ரத்னா சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் கல்வி வளர்ச்சிக்காக தமது வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்டவர் என்று குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்கும் சிற்பிகளான ஆசிரியர்கள் இந்த இலக்கை அடைய தொடர்ந்து உழைக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா வெளியிட்டுள்ள ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தியில், இந்தியாவின் முன்னேற்றத்திற்கு மாணவ தலைமுறையினரை ஆசிரியர்கள் ஊக்குவித்து வருவதாக தெரிவித்துள்ளார்.

மத்திய கல்வியமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி நேற்று மாலை தேசிய ஆசிரியர் விருதுகளை பெற்றவர்களுடன் கலந்துரையாடினார். வருகிற 2047ஆம் ஆண்டிற்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்கும் வகையில் ஆசிரியர்கள் மாணவர்களை தயார் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மாணவர்களே நாட்டின் மிகப்பெரிய செல்வம் என்றும் அவர்கள் பன்முகத் திறமை கொண்டவர்களாக வளர்க்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

## ஆசிரியர் தினம் – 2 (19)

புதுச்சேரியில் ஆசிரியர் தினம் இன்று கொண்டாடப்பட்டது. இதனையொட்டி துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் தாய் தந்தையை அடுத்து குழந்தைகளுக்கு நல்ல கல்வியோடு நல்ல பண்புகளையும் சொல்லிக் கொடுப்பவர்கள் ஆசிரியர்கள் என தெரிவித்துள்ளார். இன்றைய மாணவர்களே நாளைய சமுதாயத்தை வழிநடத்தப் போகிறார்கள் என்றும் அவர்களுக்கு எதிர்கால சவால்களை சமாளிக்கும் வகையில் ஆற்றலையும் திறனையும் ஆசிரியர்கள் வளர்க்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை நோக்கி இளைய சமுதாயத்தை வழிநடத்தும் பணி ஆசிரியர்களுக்கு உண்டு அவர் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் திரு. ரங்கசாமி விடுத்துள்ள ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தியில் வளமான ஆரோக்கியமான மற்றும் சிந்ததை திறன்மிக்க இளைய சமுதாயத்தை உருவாக்குவதில் ஆசிரியர்களின் பங்கு மிகவும் முக்கியமானது என்று அவர் தெரிவித்துள்ளார். மாணவர்களுக்கு கல்வி அறிவை வழங்குவதோடு மட்டுமல்லாமல், ஒழுக்கம், படைப்பாற்றல், சிந்திக்கும் திறன், மனித நேயம் மற்றும் சமூக பொறுப்பு போன்ற பண்புகளையும் ஆசிரியர்கள் விதைக்கின்றனர் என்று அவர் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## சி.பி.ராதாகிருஷ்ணன் -1 (13)

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று ஒருநாள் அரசுமுறை பயணமாக சென்னை வந்துள்ளார். அவரது இந்த பயணத்தின் போது அவர் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார். குறிப்பாக இதய வால்வு நோய்களுக்கான நவீன சிகிச்சை வழங்கும் இந்தியா வாய்ஸ் 2026

என்ற தேசிய நிகழ்ச்சிகளிலும் அவர் பங்கேற்கிறார். பின்னர் வள்ளுவர் கோட்டத்தில் அமைந்துள்ள பிரபல தினமலர் நாளிதழின் 75ஆவது ஆண்டைக் குறிக்கும் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் நினைவு அஞ்சல் தபால் தலையையும் வெளியிட்டார். தொடர்ந்து இந்தியாவின் தலைசிறந்த விடுதலை போராட்ட வீரரும், தேசத்தை உருவாக்கிய முன்னோடியுமான வ.உ.சிதம்பரம்பிள்ளையின் நினைவு தினத்தை முன்னிட்டு குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் அவருக்கு அஞ்சலி செலுத்தினார்.இது தொடர்பாக அவர் சமூக ஊடகப்பதிவு ஒன்றில் கப்பலோட்டிய தமிழர் என அன்புடன போற்றப்பட்ட வ.உ.சிதம்பரம்பிள்ளை தென்னிந்தியாவில் சுதேசி உணர்வை தூண்டுவதில் ஒரு புரட்சிகரமான பங்காற்றியதாக குறிப்பிட்டுள்ளார்.

மோடி ஆசிரியர் தினம் (14)

போதைப்பொருள் பழக்கத்திலிருந்து இளம் மாணவர்களை விடுவிப்பதில் ஆசிரியர்கள் கவனத்துடன் செயல்பட வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார். ஆசிரியர் தினத்தை முன்னிட்டு தேசிய நல்லாசிரியர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட 82 ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்களுடன் அவர் புதுடெல்லியில் உரையாடினார். தமது இல்லத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், குழந்தைகளின் ஆர்வத்தை ஊக்குவிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். தொடர்ந்து அலைபேசியை காணும் பழக்கம் போதையாக அனைவரிடமும் மாறிவிட்டதாக பிரதமர் குறிப்பிட்டார். அவர்களை விளையாட்டுகளில் தீவிர ஆர்வத்தை ஊட்ட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். ஆசிரியர் தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு அவர் புகழாரம் சூட்டியுள்ளார். மேலும் ஆசிரியர்களின் வலிமையான பணியையும் அவர் பாராட்டினார்.

மோடி – ஸ்ரீராம் (08)

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில் ஸ்ரீராம் வணிகவியல் கல்லூரியின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தில் பங்கேற்று உரையாற்றினார். இந்தியாவின் மிகச்சிறந்த உயர்கல்வி நிறுவனங்களில் ஸ்ரீராம் வணிகவியல் கல்லூரியும் ஒன்றாகும். 1926ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த கல்லூரி டெல்லி பல்கலைக்கழகத்தின் உறுப்பு கல்லூரியாக திகழ்கிறது. இந்த கல்லூரி தொடர்ந்து 100 ஆண்டுகளாக

வணிகவியல், பொருளாதாரம், வேளாண்மை ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் சிறந்த கல்வி நிலையமாக திகழ்கிறது.

அமித்ஷா (17)

இந்தியாவை உலகின் மிகப்பெரிய விளையாட்டு மையமாக உருவாக்குவதே நோக்கம் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார். குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் நடைபெற்ற உலக வில்வித்தை போட்டி தொடரை அவர் புதுடெல்லியிலிருந்து காணொளி காட்சி மூலம் தொடங்கி வைத்தார். இந்த போட்டியில் 19 நாடுகளைச் சேர்ந்த 108 வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொள்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். இந்தியா உலகளாவிய விளையாட்டு மையமாக உருவெடுத்து வருவதாக அவர் குறிப்பிட்டார். வரும் ஆண்டுகளில் இந்தியா விளையாட்டுகளுக்கான மிகப்பெரிய மையமாக திகழும் என்றும் அவர் தெரிவித்தார். விளையாட்டு வீரர்களுக்கான பயிற்சி உபகரணங்கள் மற்றும் வசதிகள் ஆகியவற்றை ஊக்குவிப்பதில் இந்தியா சிறந்த விளங்கும் என்றும் அவர் தெரிவித்தார். விளையாட்டுகளில் பதக்கங்களை வெல்வது மட்டும் நமது நோக்கமல்ல என்று கூறிய அவர், ஒலிம்பிக் போட்டிகளில் விளையாட அனைத்து போட்டிகளிலும் தயார்படுத்துவதே அரசின் நோக்கம் என்று குறிப்பிட்டார். அமெரிக்கா, பிரிட்டன், பங்களாதேஷ், சீனா, பிரான்ஸ், இந்தோனேசியா உட்பட 19 நாடுகள் இப்போட்டியில் கலந்துகொள்வதாக திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

ஜெய்சங்கர் (15)

உக்ரைன் மற்றும் ரஷ்யா ஆகிய இருநாடுகளின் மோதலை முடிவுக்கு கொண்டுவர இந்தியா தொடர்ச்சியான தொடர்பில் இருப்பதாக மத்திய வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். மோதலை முடிவுக்கு கொண்டுவர அல்லது தணிக்க தேவையான யோசனைகளையும், பணிகளையும் ஆராய்ந்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார். நேற்று வார்சாவில் நடைபெற்ற பேச்சு வார்த்தைக்குப் பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர் இக்கருத்தினை தெரிவித்தார். முடிவில்லா போர்களுக்குப் பதிலாக போர்கள் முடிவுக்கு வரவேண்டும் என்று இந்தியா நம்புவதாக அவர் தெரிவித்தார். போர்களில் வெற்றியாளர்களே இல்லை என்றும் அவர் தெரிவித்தார். பேச்சுவார்த்தை மற்றும் ராஜதந்திரத்தை ஊக்குவிப்பதில் முக்கிய கவனம் செலுத்த

வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். மோதலை முடிவுக்கு கொண்டு வர இந்தியா உறுதி பூண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். வெளியுறவு அமைச்சருடனான பேச்சு வார்த்தைக்குப் பிறகு போரை முடிவுக்கு கொண்டு வருவதில் இந்தியா காட்டும் உறுதிப்பாட்டிற்கு தாம் நன்றி தெரிவிப்பதாக உக்ரன் அதிபர் திரு. ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

நேபாளம் (14)

நேபாளத்தில் ஏற்பட்டுள்ள திடீர் வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவு காரணமாக இதுவரை 166 இந்தியர்கள் மீட்கப்பட்டுள்ளதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவு துறை அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் 275 இந்தியர்கள் இன்னும் காணாமல் போயுள்ளதாக தெரிவித்துள்ளார். இது தொடர்பாக நேபாள அரசு தொடர்ந்து முயற்சி எடுத்து வருவதாகவும் நோபள அதிகாரிகளை இந்திய மனதார பாராட்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். சீனாவிலிருந்து ஆயிரத்து 907 இந்தியர்கள் பாதுகாப்பாக நோபாள நாட்டிற்கு வந்துள்ளதாக திரு. ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார். வெள்ளப்பெருக்கில் பாதிக்கப்பட்ட திரிசூலி பகுதியில் 5 வயது குழந்தை உட்பட மேலும் 3 இந்தியர்கள் மீட்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். இந்த மூவரையும் சேர்த்து 169 இந்தியர்கள் மீட்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

வ.உ.சிதம்பரம் – 1 ()

சுதந்திர போராட்ட வீரர் கப்பலோட்டிய தமிழர் என அழைக்கப்படும் வ.உ.சிதம்பரம்பிள்ளையின் 154ஆவது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இது குறித்த ஒரு செய்தி தொகுப்பு...

(வாய்ஸ்)

வ.உ.சிதம்பரம் – 2 வாய்ஸ் (18)

(வாய்ஸ்)

வ.உ.சிதம்பரம்பிள்ளை தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்ற வழக்கறிஞர் ஆவார். தொழிற்சங்க தலைவர், சுதந்திர போராட்ட வீரர் என பன்முக தன்மை கொண்டவர் ஆவார். இவர் 1892ஆம் ஆண்டு பாலகங்காதர திலகர் அவர்களின் ஆற்றல் மிகுந்த எழுத்தால் கவரப்பட்டு அவரின் சீடரானார். இவர் தான் இந்திய போராட்டத்தில் பங்குகொண்டதோடு மற்றவர்களையும் பங்கு கொள்ளச் செய்தார்.

ஆங்கிலேயர்களின் அடக்குமுறையை எதிர்த்து போராடினார். அவர்களின் கொடூர சட்டங்கள் குறித்து மக்களிடையே எடுத்துக்கூறினார். வஉசி 1906ஆம் ஆண்டு ஒரு கப்பல் நிறுவனத்தை நிறுவினார். கப்பல் நிறுவனம் மெதுவாக வளர்ந்து மக்கள் அதில் பயணம் செய்தனர். வணிகர்கள் தங்கள் சரக்குகளை சுதேசி கப்பலிலேயே அனுப்பினர். சுதேசி கப்பலின் வளர்ச்சி ஆங்கிலேயர்களை எரிச்சலூட்டியது. சுதேசி கப்பல் நிறுவனத்தின் வெற்றியுடன் வஉசி தொடர்ந்து மக்களிடையே விடுதலை போராட்ட உணர்வை தூண்டினார். காவல்துறையினர் வஉசிக்கு எதிராக நீதிமன்றத்தில் பல வழக்குகளை தொடுத்தனர். சிறையில் வஉசி கடுமையான வேலைகளை செய்தார். கல் உடைத்தார். செக்கினை இழுத்தார். தனது விடுதலைக்குப் பின்னர் அவர் சென்னை, கோயம்புத்தூர், கோவில்பட்டி, தூத்துக்குடி உள்ளிட்ட இடங்களில் வசித்தார்.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

ஆசிரியர் தினம், இன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. ஆசிரியர்கள் தங்களது படிப்பறிவை வளர்த்துக் கொள்வதுடன், தொழில்நுட்பத்தை பயன்படுத்தி புதுமையான தத்துவ முறைகளை பின்பற்ற வேண்டும் என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னை வந்துள்ள குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று பிரபல நாளிதழ் ஒன்றின் 75ஆவது ஆண்டு நினைவு தபால் தலையை வெளியிட்டார்.

போதைப்பொருள் பழக்கத்திலிருந்து இளம் மாணவர்களை விடுவிப்பதில் ஆசிரியர்கள் கவனத்துடன் செயல்பட வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

உக்ரைன் மற்றும் ரஷ்யா ஆகிய இருநாடுகளின் மோதலை முடிவுக்கு கொண்டுவர இந்தியா தொடர்ச்சியான தொடர்பில் இருப்பதாக மத்திய வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இத்துடன் இந்தச் செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RM/MS/VM